31st August 1970]

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கோவைக்குத் தேர்வுக்காகச் சென்ற மாணவர்களில் ஒரிருவரை நான் விசாரித்தபோது, இப்படிப் பட்ட கேள்விகள் கேட்கப்பட்டதாக என்னிடமே அவர்கள் கூறினார்கள். அரசாங்கத்திற்கு அதுபற்றிய புகார் ஏதேனும் வந்ததுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிக் கேள்வி கேட்ட தாக நான் கூட பத்திரிகையில் செய்தி பார்த்தேன். எனவே அந்தக் குழுவின் தலைவரிடம் நான் கேட்டேன். ஆனால் அப்படிப்பட்ட கேள்வி எதுவும் கேட்கப்படவில்லை என்றும், குழுவில் ஒரு தனி உறுப்பினராக வந்தவர் மாத்திரம் ஒரே ஒரு மாணவரைப் பார்த்து, ''நீ சினிமாவுக்குப் போவது உண்டா?'' என்றுதான் கேட்டார் என்று குறிப்பிட்டார். வேறு எந்தத் தவறான முறையிலும் அரசியல் தொடர்புடைய கேள் வியோ, தனிப்பட்ட நபர்களைப் பற்றியோ, சினிமா நடிகர்களைப் பற்றியோ கேள்வி எதுவும் கேட்கப்படவில்லை. இந்தக் கேள்வி கேட்ட தற்குக் காரணம் மாணவருடைய மனப்பான்மை எப்படி இருக்கிறது என்பதை அறிவதற்காகத் தான். இந்த மாணவர் படிக்கக்கூடியவர் தானா அல்லது சினிமாவுக்குப் போகிறவரா என்று தெரிந்துகொள்ள 'நீ சினிமாவுக்குப் போவதுண்டா', அந்தப் பழக்கம் உண்டா என்று தான் கேட்டார் என்று அவர் குறிப்பிட்டார்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : கோவையில் உள்ள விவசாயக் கல்லூரியை அவசரச் சட்டம் கொண்டு வந்து பல்கலைக் கழகமாக மாற்றுவதாகச் சொன்னார்கள். சட்ட மன்றத்திலும் ஒரு மசோதா கொண்டு வந்து பல்கலைக் கழகமாகச் சட்டப்படி மாற்றுவதாகச் சொன்னார்கள். ஆனால் இப்படியே அது காலதாமதமாகிறது. இந்த ஆண்டே ஏற்படுத்தப் போவதாகச் சொன்னது இன்னும் ஏற்படவில்லை. எனவே இதில் ஏதா வது தவிர்க்க முடியாத சிக்கல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தவிர்க்க முடியாத சிக்கல் எதுவும் இல்லை. கோவையில்தான் பல்கலைக் கழகம் ஏற்படப் போகிறது. இந்த ஆண்டே அது ஏற்பட இருந்தது. ஆனால் இப்போது இலாக்காவின் கீழ் இருக்கும் இன்னும் சில ஆராய்ச்சி நிலையங்களை மீண்டும் இலாக்கா வின் கீழேயே வைத்துக் கொள்வதா அல்லது பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்துவிடுவதா என்று ஒரு சிறிய சிக்கல் எழுந்தது. எனவே மற்ற பல்கலைக் கழகங்களைச் சென்று பார்வையிட்டு இது சம்பந்தமாகத் தெரிந்துகொண்ட பிறகு, இதில் ஒரு முடிவெடுக்கலாம் என்று தற் போது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இல்லையென்றாலும், அடுத்த ஆண்டு கண்டிப்பாக வரும்.

Transport of paddy

*58. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(*a*) whether there is any proposal before the Government to remove the 50% levy for transport of paddy from Thanjavur district in view of surplus paddy position with the Government ; and

(*b*) if so, the stage at which the matter now stands ?

[31st August 1970

நெல் எடுத்துச் செல்லுதல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு உணவு வணிகவரி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசிடம் நெல் இருப்பு உபரியாக இருப்பதன் காரணமாக தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நெல் எடுத்துச் செல்வதற்கான 50 சதவீத விதிமுறைக் கொள்முதலை நீக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : (அ), (இ) : ஆம். குறுவை நெல் தாராளமாக விற்பனை செய்யப்படுவதற்கு வகை செய்வதற்கென 1970 செப்டம்பர் 15-ஆம் நாள் முதல் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நெல்/அரிசி எடுத்துச் செல்லப்படுவதன் மீதான எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்குவதெனவும், 50 சதவீத விதிமுறை கொள்முதலை நிறுத்தி வைப்பது எனவும் அரசு முடிவெடுத்துள்ளது.

THIRU A. R. DAMODARAN : May I know whether procurement is to be totally stopped or whether it is to be restricted to the extent of 15 per cent which is being done in other districts ?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : இந்த 15 சதவீதக் கொள்முதல் முறைகூட தற்போது தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

MR. CHAIRMAN : Question 59 is postponed.

Panchayats

*60. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the news item published recently in "Panchayat Seithi", a weekly magazine, that the Hon'ble the Minister for Local Administration has stated that he would appoint a high-level Committee to study the working of the Panchayats is correct; and

(*b*) if so, when the Committee will be formed ?

பஞ்சாயத்துக்கள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பஞ்சாயத்து ஊராட்சிகளில் நிலவரத்தைக் கண்டறிய ஒரு உயர்தர ஆய்வுக் குழுவை நியமிக்கப் போவதாக தமிழ் நாடு அரசின் உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கூறியதாக அண்மையில் ''பஞ்சாயத்து செய்தி'' என்னும் வார இதழில் வெளியான செய்தி சரியா ?

(இ) ஆமெனில் அக்குழு எப்பொழுது அமைக்கப்படும் ?